**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness : 11**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சிவலிங்கம் | **Caste** | : |
| **Father's Name** | : சின்னையன் | **Calling** | : விவசாயம் |
| **Village** | : சிறுமலை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 57 |
| | | **Dated** | : 25.02.2025 |

**25.02.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–12 திரு. சிவலிங்கம் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.11 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் சிறுமலையில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு காலை 5.15 மணிக்கு திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து தென்மலைக்கு அரசு பேருந்தில் ஏறினேன். நான் பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது நான் துாங்கிவிட்டேன். பேருந்து சாய்ந்தபின்புதான் நான் முளித்துப் பார்த்தேன். பேருந்து சாய்ந்த இடமானது 18 வது பெண்டு. அந்த சம்பவத்தில் எனக்கு வலது பக்க முட்டியில் பலத்த காயம் ஏற்பட்டது. வலது பக்க நெற்றியிலும், இடது முழங்கையிலும் காயம் பட்டது. ஆஜர் எதிரிதான் சம்பவத்தின்போது

பேருந்தை ஓட்டியநபர் ஆவார். அதன்பின்னர் காயம்பட்ட என்னையும் மற்ற நபர்களையும் 108 ன் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக அனுமதி கோரப்பட்டு பகுதி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.</u>**

நான் போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரியின் கவனக்குறைவால்தான் பேருந்து ரோட்டின் வலது பக்கமாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்று கூறிவிட்டு தற்பொழுது பேருந்தில் தான் தூங்கிவிட்டதாகவும், எவ்வாறு பேருந்து கவிழ்ந்தது என்று தெரியாது என்று பிறழ்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

விபத்து நடந்ததாக சொல்லப்படும் ரோடு குறுகலான ரோடு என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.02.25 19:32:57 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness : 12**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சின்னா | **Caste** | : |
| **Father's Name** | : சின்னச்சாமி | **Calling** | : டீ கடை |
| **Village** | : சென்னிமலை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **56** |
| | | **Dated** | : **25.02.2025** |

**25.02.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–13 திரு.சின்னா ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.12 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் சென்னிமலையில் குடியிருந்து டீ கடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு காலை 5.15 மணிக்கு திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து சென்னிமலைக்கு அரசு பேருந்தில் ஏறினேன். நான் பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது பேருந்து கவிழ்ந்துவிட்டது. எப்படி கவிழ்ந்தது என்று எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரிதான் பேருந்தை ஓட்டினார். இந்த சம்பவத்தில் எனது வலது கை இரண்டு விரல்களில் காயம் ஏற்பட்டது. நெஞ்சில் ஊமைக்காயம் பட்டது. அதன்பின்னர் காயம்பட்ட என்னையும் மற்ற நபர்களையும் 108 ன்

மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக அனுமதி கோரப்பட்டு பகுதி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

நான் போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரியின் கவனக்குறைவால்தான் பேருந்து ரோட்டின் வலது பக்கமாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்று கூறிவிட்டு தற்பொழுது பேருந்தில் தான் தூங்கிவிட்டதாகவும், எவ்வாறு பேருந்து கவிழ்ந்தது என்று தெரியாது என்று பிறழ்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்து நடந்ததாக சொல்லப்படும் ரோடு குறுகலான ரோடு என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.02.25 19:33:06 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness : 13**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சேகர் | **Caste** | : |
| **Father's Name** | : ரெங்கசாமி | **Calling** | : நடத்துனர் |
| **Village** | : கள்ளிப்பட்டி | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 53 |
| | | **Dated** | : 25.02.2025 |

**25.02.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–14 திரு.சேகர் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.13 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>**எதிரி ஆஜர்**</u>

1. நான் திண்டுக்கல் கள்ளிப்பட்டியில் குடியிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தில் நடத்துனராக வேலை செய்து வருகிறேன். சம்பவத்தின்போது TN 57 N 2254 என்ற அரசு பேருந்தில் நடத்துனராகப் பணிபுரிந்தேன். அன்றைய தினம் மேற்படி பேருந்திற்கு ஆஜர் எதிரிதான் டிரைவர் ஆவார். மேற்படி பேருந்து காலை 5.15 மணிக்கு திண்டுக்கல் அரசு பேருந்து நிலையத்தில் இருந்து சிறுமலைக்கு கிளம்பியது. பேருந்தில் சுமார் 14 பயணிகள் பயணம் செய்தார்கள். பேருந்து மெதுவாகத்தான் சென்றது. மேகமூட்டம் அதிகமாக இருந்தது. குட்டக்காடு என்ற இடத்தில்

18 வது பெண்டில் ஓட்டுனர் பேருந்தை வலது பக்கமாக திருப்பியபோது பேருந்து பள்ளத்திற்குள் கவிழ்ந்துவிட்டது. அதில் எனக்கு வலது பக்க தோள்பட்டையில் சிறாய்ப்பு காயம்பட்டது. பேருந்தில் பயனித்த அனைத்து பயணிகளுக்கும் காயம்பட்டது. அதன்பின்னர் காயம்பட்ட என்னையும் மற்ற நபர்களையும் 108 ன் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக அனுமதி கோரப்பட்டு பகுதி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

நான் போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரியின் கவனக்குறைவால்தான் பேருந்து ரோட்டின் வலது பக்கமாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்று கூறிவிட்டு தற்பொழுது எதிரி தன்னுடன் வேலை செய்யும் நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பிறழ்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்து நடந்ததாக சொல்லப்படும் ரோடு குறுகலான ரோடு என்றால் சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.02.25 19:33:16 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No. 1869/2024**

**Prosecution Witness : 14**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாண்டித்துரை | **Caste** | : |
| **Father's Name** | : கணேசன் | **Calling** | : டிரைவர் |
| **Village** | : சிறுமலை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : **31** |
| | | **Dated** | : **25.02.2025** |

**25.02.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–15 திரு. பாண்டித்துரை ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.14 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

1. நான் திண்டுக்கல் சிறுமலையில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன்.என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை சுமார் 2வருடத்திற்கு முன்பு சிறுமலை குட்டக்காடு என்ற இடத்தில் 18 வது பெண்டில் அரசு பேருந்து விபத்திற்குள்ளான இடத்தை போலீசார் விசாரணை செய்து படம் வரைந்து எழுதினார்கள். அப்பொழுது நான் கையொப்பம் போட்டுக் கொடுத்தேன். (**பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் சொன்ன நாள் நேரத்தில், சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW
Digitally signed by SOUMYA MATHEW
Date: 2025.02.25 19:33:24 +0530

Judicial Magistrate No.I
Dindigul.